Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆனிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி வருஷம் புரட்டாதி மீ ௧அ உ வெள்ளிக்கிழமை (4 OCTOB 1957) [இல-௨௬]

# உலக சமாதானத்துக்கு முயற்சி

## சித்தியடையாமைக்குள்ள காரணங்கள்

### ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை

உலக சமாதானத்தை உண்டாக்குதற்கு மக்கள் பலர் பலவாறு முயல்கின்றனர். மகாநாடுகள் பல நடத்தப்படுகின்றன; ஒப்பங்கள் செய்யப்படுகின்றன; அப்படிச் செய்தும் உலக நிலைமைகள் ஏறக்குறைய இருந்தபடியே இருக்கின்றது. அப்படியானல் எங்களை முன்னிட்டிருக்கும் இடையூறு நீக்கப்படுதற்கு வழியாது? யுத்த அபாயங்களை நீக்கும் வழி என்ன? இச்சிக்கலைத் தீர்க்க ஒவ்வொருவரும் முயல்கின்றனர். ஆனல் அதைத் தீர்க்கும் வழியைக் காண முடியவில்லை. அச்சத்தாற் பீடிக்கப்பட்டு வருந்துகிறேம். ஆனல் நல்லெண்ணத்தையும் சமாதானத்தையும் உலகில் உண்டாக்குதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அறியாமலிருக்கின்றேம்.

உலகில் நடக்கும் குழப்பங்கள் சண்டைகள் ஆகியவற்றுக்குக் காரணமாக உயர்ந்த நோக்கம் என்பது இடம் பெறவில்லை. அதிகாரம், பொருள், புகழ் முதலிய நிலையில்லாச் சிறப்புக்களிலுள்ள வேட்கையே அவற்றுக்கு ஒரு காரணமாயிருக்கின்றது. சமுத்திரத்தின் மேற்பரப்பில் தோன்றி மறையும் குமிழிகள் போன்றிருக்கின்றன இலௌகிக தீரச் செயல்கள். ஒரு கணத்தில் அவை எங்கள் உடைமை போன்றிருந்து மறு கணத்தில் அற்றுப்போகின்றன.

சமாதானமே நாங்கள் வேண்டுவது. அது உயிர்களின் இயல்பான வேட்கையாயமைந்துள்ளது. எங்கும் வியாபித்து நிறைந்திருக்கும் உண்மைப் பொருளுடன் எம்மை இணைப்பதனுலேயே நாம் வேண்டும் சமாதானத்தைப் பெறுதலாகும். மற்றவர்களைக் கீழ்ப்படுத்தச்சண்டைசெய்கிறேம். அப்படிக் கீழ்ப்படுத்துவதனல், நாங்கள் சமாதானமாய் இன்புற்றிருக்கலாமென்று எண்ணுகிறேம். சமாதானத்தையும் இன்பத்தையும் உண்டாக்கும் நோக்கத்துடன் உலக அதிகாரத்தைப் பெறும்பொருட்டு நாங்கள் ஆரியாக்காலந் தொடக்கம் சண்டைகளும் குழப்பங்களும் நடந்து வருவதாகச் சரித்திர மூலம் நாங்கள் அறிகிறேம்.

சமாதானத்துக்காகச் சண்டை செய்வது உண்மைக்கெதிராயுள்ள தொன்றென்பது திண்ணம். உங்களுக்குள்ளே சென்று உண்மைப் பொருளாகிய கடவுளைக் கண்டே உண்மைச் சமாதானத்தைப் பெறுதலாகும். அகமுகமாகவே சமாதானம் தேடப்பட வேண்டியது. அரசியல் வாதிகள் இப்பொழுது செய்வது மேற்பரப்பிலுள்ள வேறுபாடுகளை நீக்க முயல்வதாகும். இந்த முறைகளால் அவர்கள் நிலையான சமாதானத்தை அடைய முடியாது. சண்டைகள் மேன்மேலும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும். யாவரும் சமாதானம் உண்டாக்க முயல்வதாகப் பேசுகிறார்கள். ஆனல் அதே நேரத்திற் சண்டைக்கு வேண்டிய ஆயுதங்களும் செய்கின்றார்கள். சமாதானம் உண்டாக்கும் பொருட்டு உலகில் நடக்கும் மகாநாடுகளையும் ஒப்பந்தங்களையும் ஆராய்வோமானல் அவையெல்லாம் அறியாமை காரணமாகவே செய்யப்படுகின்றன என்பதை நாம் நன்கு காணலாம். உள்ளத்தில் உண்மையான நம்பிக்கை இல்லாது ஒருவரை ஒருவர் நம்பச் செய்தற்கு நாம் முயற்சி செய்கின்றேம். ஆகையினலே இம்முயற்சிகள் தோல்வியுற்று உலகெங்கும் குழப்பமும இன்னலும் உண்டாகின்றன.

இந்த அபாயமான நிலைமையிலிருந்து நீங்குதற்கு ஒரேஒரு வழி உள்ளது. அது, அகில உலகின் அடிப்படையிலுள்ள உண்மையை உணர்ந்து நல்லெண்ணத்தையும் சமாதானத்தையும் உண்டாக்க ஒவ்வொருவரும் முயல்வதாகும். சமாதானம் எங்களுக்கு உள்ளேயே இருக்கின்றது.

ஆகையினலே எங்களுக்குள்ளே உள்ள தெய்வப் பொருளை நாங்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டும். அறிந்தபடி கடவுளின் புகழை எங்கும் பரப்ப வேண்டும். நாங்கள் பெற்ற அறிவை எங்களுடன் தொடர்பு பெறும் ஒவ்வொருவருக்கும் ஈதல் வேண்டும். அப்படிச் செய்வதனல் உண்மையான சமாதானச் சூழலை உண்டாக்கி உலகிலுள்ள யுத்தப் பீதியை அகற்றிவிடலாம். இச் செயற்கருஞ் செயலைச் செய்தற்கு ஆயத்தம் செய்யும் முறை பகைமை என்பதை மனத்திலிருந்து முழுதாய் நீக்குதலாகும். அப்பொழுதுதான் கடவுளின் அருளொளி எம்மிற் படிந்து தெய்விக அன்பின் அலைகள் உலகெங்கும் பரவுதல் கூடும். இந்தச் சமாதான இயக்கச் சக்தி ஓர் உள்ளத்திலிருந்து மற்றேருள்ளத்துக்குச் சென்று சமாதானச் சூழ்நிலையை அணுமண்டலத்திற் பரப்பி சண்டைகளுக்கும் குழப்பங்களுக்கும் சிறிதும் இடமில்லாமற் செய்யும்.

ஒரு சில அதிகார வெறியினராலோ அல்லது ஒரு சில அரசியல் வாதிகளாலோ அல்லது ஒரு சில மக்களாலோ யுத்த வேட்கை உண்டாக்கப்படுவதாகவும் பொது மக்கள் சண்டையை விரும்பவில்லையென்றும் யுத்தங்களுக்கு அவர்கள் காரணரல்லர் என்றும் சிலர் கருதலாம். ஆனல் அது உண்மையல்ல. யாரிடத்திலே எனினும்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## ஐக்கியப் பகுதி அதிகாரிகள் மாற்றம்

ஐக்கியப் பகுதியின் மொத்த விற்பனை நிலைய அதிகாரிகள் மூவர் பதவிகளிலிருந்து உணவு. மந்திரியால் நீக்கப்பட்டுள்ளனராம் மற்றொருவர் பதவியைத் தாமே துறந்து விட்டாராம். ஸ்ரீ டி இ.ஹெற்றி ஆராய்ச்சி, ஸ்ரீ ஏ. அருளம்பலம், ஸ்ரீ பி. இ. வீரமான் ஆகியோர் குறித்த பதவிகளில் அமர்வார்களென்றும் அறியவருகின்றது.

அருள் மொழி:

## நீர் யார்?

நீர் யாரென்று அறிவீரா? இதோ சொல்லுகிறேன். நீர் உம்முடைய உடலுக்கும் மனத்துக்கும் இந்திரியங்களுக்கும் தலைவனயிருக்கின்றீர். எல்லாச் சக்திகளும் உம்மிடமிருக்கின்றன. இவ்வுண்மையை நீர் அறிந்து அவற்றை வெளிப்படுத்துதல் வேண்டும்.

மனம் உம்மை எவ்வாறு வருத்துதல் கூடும்? துன்பம் எப்படி உம்மை மேற்கொள்ள முடியும்? துன்பப்படுவது மனத்தின் தன்மை. மனமோ உமது அடிமை மனத்துக்கும் இந்திரியங்களுக்கும் நீர் அடிமை அல்ல என்பது நீர் அறிய வேண்டியது ஒன்று. மனமும் இந்திரியங்களும் நாடுவதை நீர் நாடுவதாக நினைக்கப் பழகிவிட்டீர். மனத்துக்கும் இந்திரியங்களுக்கும் தொடர்பில்லாது நீர் வேறாயுள்ளீர் என்பதை மேன்மேலும் நினைவுகூருக. உண்மையை அறிய முயலும் தெய்விக முயற்சியில் ஈடுபடுக.

ஸ்ரீ சுவாமி சிவானந்தா.

# சத்தியாக்கிரகத்துக்குத் 'தத்து'

## சிந்தித்துப் பார்க்குமாம் 'சிங்கள மண்டலம்'

### மலைநாட்டில் ம. ஐ. மு. வாய்வீரம்

கண்டியிலேதான் கட்சிகளுக்குக் கண். கண்டியைச் சார்ந்த திரு. தொண்டமான் அடுத்த பிரதமர் ஆவார் என்றுகூடக் கனவுகண்டிருக்கின்றார் ஒரு அரசியல்வாதி. சங்கப்பலகை போலக் கண்டி மாமக்கள் தோற்றுவார்களா என்பதுதான் கேள்வி.

திரிசிங்கள பெரமுனை முதலிய மூன்று சங்கங்களமைந்த சிங்கள மண்டலம் 'சற்றே பொறுத்திருப்போம்' என்று ஞானோபதேசஞ் செய்து ஐப்பசிச் சத்தியாக்கிரகம் இப்பொழுது இல்லை என்று தீர்மானித்து விட்டது. 'நானுங்கூட' என்ற அரசியல் ஆரவாரத்திற்கலந்துகொள்ளும் திரு J R. ஜயவர்த்தனவும் அரிய தோழர்களும் தனியே விடப்பட்டனர். அரசாங்கமும் பாடிகாவலரின் பாதுகாப்பை நடைப்போர் நண்பர்களுக்கு அளிக்க மறுத்து விட்டதாம். இவ்வளவில் வந்து விட்டது ஐ. தே. கட்சியின் செல்வாக்கு.

நடைப்போரைத் தடை செய்யுங்கள் என்று பாராளுமன்ற அங்கத்தவர்கள் யோசனை கூறுகின்றார்களாம். வேறுசிலர் நடைப்போர் தடியடிப் பிரயோகமாய் விளைந்து தலைவர்களின் தலைகள் உடைபடுவதாகவும் நிகழக்கூடும் என்று வீரஞ் சொல்கின்றார்களாம். இன்னும் பலர் இந்த நடை விந்தையேயல்லாமல் வேறல்ல என்றும் ஐ. தே. கட்சிக்கு இது சொந்த நடையல்லவென்றும் நினைக்கின்றார்கள்.

நடப்பதைத் தடுக்க யாரால் முடியும். எல்லாம் நடந்தே முடியும் என்பது முன்னேர் மொழியல்லவா? வைத்தியர்கள், வாகனங்கள், விருந்து விருந்தினர்கள் என்றமைந்த வகையிலே இந்திர போகப் பவனியில் அடியெடுத்து நடை நடந்து மாதம்போம் காதவழி யாத்திரையிற் காதல் வைத்திருக்கும் திரு. ஜயவர்த்தன எந்தநடை நடந்தாலும் இனி அந்த அரசபீடத்தில் அமரப்போவதில்லையென்பதுண்மை.

## இலங்கைப் பல்கலைக் கழக பிரவேச பரீட்சை

எதிர்வரும்1959-ம் ஆண்டு முதல் இலங்கைப் பல்கலைக் கழக பிரவேச பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும நடத்தப்படும்.

அடுத்த ஆண்டு 1958, ஜனுவரி முதல எச். எஸ். ஸி. முதலாம் வருட வகுப்புக்கள தமிழ் சிங்களம ஆகிய மொழிகளிலும் நடத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹூ புரட்டாதி மீ கஅ௳ வெள்ளிக்கிழமை


## விடுமுறை விதியிலும் விபரீதமா?

மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மனப்பான்மை நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருவதைப் பார்க்குமிடத்து ஒரு இனம் ஒருமொழி ஒரு மதம் என்ற கொள்கை ஆட்சியை இந்நாட்டில் நிலைநாட்டுவதற்கு நயவஞ்சகச் சதி நடைபெறுகின்றதென்றே கூறவேண்டியிருக்கின்றது. தனிச் சிங்களம் என்று நாணம் வெட்கமின்றிச் சட்டமியற்றிய பண்டாரநாயக ஆட்சியாளர் பொதுவாய்ப் புத்தம் என்ற வகையில் ஈழத்தின் அரசியல் அமைப்பு உருவெடுக்கத்தக்க வழியிலே பலவேறு நடைமுறை மாற்றங்களைச் செய்வதற்குத் துணிந்து விட்டனர். மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி வந்ததும் புத்தமதத்தினருக்காகப் புதுப்புது விடுமுறை நாட்கள் பல அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பெற்றன. அப்பொழுது இந்துக்கள், இசுலாமியர், கிறீஸ்தவர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்பொழுது அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்வதற்குப் போதிய நாட்கள் இல்லை என்று சொல்லிவிட்டு மந்திரியார் விடுமுறை நாட்களிற் பலவற்றை வேலை நாட்களாக மாற்றிவிட உத்தரவு விடுத்திருக்கின்றார்.

விடுமுறை நாட்களை மேலதிகமாக விதித்த மந்திரியார் வேறு மதத்தினர்களுக்குரிய விடுமுறை நாட்களை வேலை நாட்களாக்கத் துணிந்தமை இனவெறி இறுமாப்பையும் வகுப்புவாத வன்கண்மையையும் எடுத்துக் காட்டுவதோடு இந்நாட்டிலே சனநாயக ஆட்சி கனவிலும் நடைபெறவில்லை என்பதை நன்கு வெளிப்படுத்துகின்றது.

தைப்பொங்கல் கிறீஸ்தவ புத்தாண்டு முதலியன குறிக்கப்பெற்ற மதங்களுக்குரிய நாட்களெனினும் பல்லாண்டுகளாக எல்லாராலும் கொண்டாடப்பட்டு வரும் தேசீய தினங்களாய் வழமையாய் வந்துவிட்டன. இந்த உண்மையை மறந்து மந்திரியார் மொழித்தாக்குதலின் வழியாக மதப் பொருதுதலையும் எழுப்பியிருக்கின்றார். இவ்வாறு இலங்கையை புத்தசிங்கள நாடாக்குவதற்கு இதர திட்டங்கள் பல தொடர்ந்து தோற்றமளிக்கும் என்பதற்கையமின்று. ஆனால் ஈழவள நாட்டைத் தொன்று தொட்டு எந்த எந்த இனங்கள் மொழிகள் மதங்கள் சொந்தமாகக் கொண்டு வந்தனவோ அவையெல்லாம் இந்த நீதியீனத்தைக் கண்டு கண்மூடித் தலைகுனிந் தடிமைகளாய் இருக்கமாட்டார்கள் என்பதைப் பண்டாரநாயக ஆட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது. பல்வேறு மதங்களின் மொழிகளின் பண்பாட்டைப் பாதுகாப்பதற்கு பணியாற்றுகின்றோம் என்று மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பறைசாற்றுவதின் நெறியை யறியாதவர்கள் இனி உண்மையை யறிந்து மந்திரியாருக்கு மொழி கூறுவார்களா?

### அஷ்டப் பிரபந்தம் கல்லாடம் புதுமுறைப்பதிப்பு

விஜய தசமித் தினமாகிய வியாழக்கிழமை காலை 9 மணிக்கு (3-10-57) சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், அஷ்டப்பிரபந்தம், கல்லாடம், புதுமுறைப் பதிப்பு வெளியீட்டுவிழா இராஜாஜி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

### உலகசமாதானத்துக்கு......

—()—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுத்த வேட்கை உண்டாதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாயிருக்கின்றோம். எங்கள் உள்ளங்களில் கோபமும் வெறுப்பும் இருக்கும் வரையில் நேராயோ, மறைமுகமாகவோ யுத்த வேட்கையை நாங்கள் உண்டாக்குகின்றோம். பிறிதொரு முறையிலும் யுத்த விருப்பத்தை நாங்கள் உண்டாக்குகின்றோம். யுத்த விருப்பமுடையோரை எங்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிந்தனுப்புகின்றோம். யுத்தமுண்டாகும் பொழுது அவர்கள் தங்கள் தலைவர்களை ஆதரிக்கின்றார்கள்.

இறைவனைத்தியானித்து எங்கள் மனத்தை அமைதியாகவும் சமாதானமாகவும் இருக்கச்செய்து ஒருவரை ஒருவர் நேசிக்கத் தொடங்கினால், யுத்தத்தை விரும்பி முனைந்து நிற்பவர்களை யுத்த ஆயத்தங்களைக் கைவிடுவர்; மக்கள் மனத்திலிருந்து யுத்த எண்ணம் அகன்றுவிடும். ஆகையினாலே தனித்தும் ஒருமித்தும் சமாதானச் சூழலை உண்டாக்குதற்கு நாம் முயலுதல் வேண்டும். யுத்தத்தை உண்டாக்கும் பொறுப்பும் சமாதானத்தை உண்டாக்கும் பொறுப்பும் எங்கள் ஒவ்வொருவர் மீதும் பொருந்தியிருக்கின்றது.

(ஸ்ரீ சுவாமி இராமதாசர் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம்.)

## சைவபரிபாலன சபையின் அனுதாபம்



ஞாயிற்றுக்கிழமை 29-9-57 யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய நிருவாக சபைக் கூட்டத்தில் திரு. சி. நாகையா அவர்கள் பிரிவைக் குறித்து ஒரு அனுதாபப் பிரேரணை நிறைவேற்றியது. திரு த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் இப்பிரேரணையைச் சமர்ப்பிக்கும் பொழுது திரு நாகையா அவர்கள் ஒரு ஆசிரியராக விருந்துகொண்டு சைவசித்தாந்த சாத்திரத்தை நன்கு கற்றனர். தான் கற்ற சித்தாந்தக் கல்வியைப் பிறரும் அறியச்செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் சைவப் பிரசங்கங்கள் செய்தும் கட்டுரைகள் எழுதியும் சைவ சித்தாந்த வகுப்புக்கள் நடத்தியும் வந்தனர். சைவபரிபாலனசபை ஆதரவில் நீண்ட காலம் சைவசித்தாந்த வகுப்பு நடத்தி வந்தனர் என்று கூறினர். பிரேரணை சபையாரால் அங்கீகரிக்கப்பட்டபொழுது யாவரும் இரண்டு நிமிஷநேரம் எழுந்து மவுனமாக மரியாதை செய்தனர்.

பிரேரணை:

"நமது நாட்டில் சைவத்தொண்டும் தமிழ்ப்பொழிந்தொண்டும்புரிந்து சைவசித்தாந்த சாத்திரத்தை நன்கு கற்று சைவப் பிரசங்கங்கள் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்தியும சைவமக்களுக்குப் பேருதவிபுரிந்தும் வந்த பெரியார் திரு. சி நாகையா அவர்களின் பிரிவைக்குறித்து இச்சபை பெரிதும் அனுதாபப்படுகின்றது".

குறித்த பிரேரணை அவருடைய குடும்பத்தினருக்கு அனுப்பவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இன்று இருப்பாரேல்

மாசற்ற மனம்

வஞ்சமில்லா வாக்கு

தெய்வநெறிச் செயல்

மகாத்மாவின் மாண்பு



## சிவஞானபோதம் ஒரு தேன் வதை

——0—0——

(முற்றொடர்—2)

இக்கால அரசியல் நிலையையும மக்கள் கொள்கைகளையும் பார்த்துவிட்டு இந்து அறநிலையச் சட்டம் இயற்றப்பட்டால் தமிழர்கள் சிறுபான்மையினராயிருக்கும் அரசாங்க நிருவாகத்தில் இந்து ஆலயங்களினது அறநிலையங்களினதுப் நோக்கங்களும் பயன்களும் பாதிக்கப்படுமென அஞ்சி அச்சட்டத்தைத் தடுப்பதற்கு மிகவும ஆர்வத்துடனும் வன்மையுடனும் கடமையாற்றினவர். இப்பொழுது இயற்றப்படவிருக்கும் சட்டத்தில் சைவ சமயத்துக்குப் பாதகமாகவுள்ள பாகங்கள் திரு. சி. நாகையா அவர்களின் நனமுயற்சியினல் நீக்கப்பட்டனவென்று கூறுதலும் மிகையாகாது. நமது நாட்டிலே உள்ள குருக்கள்மார்களை ஒன்று சேர்ப்பதென்பது பகீரதப் பிரயத்தனமாகும். அது திரு நாகையா அவர்களாலேயே பூர்த்திசெய்யப்பட்டதாகும். அகில இலங்கைச் சைவசமயக் குருக்கள்மார் சங்கம் இவருடைய முயற்சியினால் தாபிக்கப்பட்டது. வேதாகம சைவசித்தாந்த சபை, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை, வண்ணார்பண்ணை இந்துமகாசபை போன்ற சபைகளிற் சேர்ந்து முக்கியமான கடமைகளாற்றி வந்தனர்.

திரு. நாகையா அவர்களின் சமய வாழ்க்கையும் சமயத் தொண்டும் சோபிப்பதற்கு அவருடைய பாரியார் அவருக்குப் பெருந்துணையாக விருந்தாரென்பது குறிப்பிட வேண்டிய செய்தியாகும். திரு. நாகையா அவர்களின் பாரியார் ஸ்ரீமதி ஞானப்பூங்கோதை கொழும்பில் பிரபல (புரோக்கர்) தரகராக விருந்த திரு. சொக்கநாதர் முருகேசு அவர்களின் புத்திரியாவர். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரைச் சடையப்ப வள்ளல் ஆதரித்தமைபோல் திரு முருகேசு அவர்களும அவரது பாரியாரும் சைவசித்தாந்த சரபம காசிவாசி சிவ ஸ்ரீ செந்திநாதையர் அவர்களை ஆதரித்துவந்தார்கள். சித்தாந்த நூல்கள் தேவாரமவேதசாரம் முதலியவற்றை ஐயரவர்கள் எழுதி அச்சிடுவதற்கு இக் குடும்பத்தினர் பேருதவி புரிந்தனர். அதல்லாமலும ஐயரவர்களுக்கு பாதவீதம அவர் சிவியத்துக்குப் பணவுதவியும் புரிந்தனர். இவ்விதமாக ஒரு பிராமண சன்னியாசியை ஆதரித்துச் சைவத் தொண்டு புரிந்த புண்ணியத்தின் பேறு சுத்தான் திரு. நாகையா அவர்கள் அக்குடும்பத்தில் சேரக்கூடியதாயிருந்ததும்போலும். திரு. நாகையா அவர்களுக்கு ஏழுபிள்ளைகளுண்டு. மூன்று ஆண். நாலு பெண். இவர்களுக்குள் அவருடைய சிரேட்ட புத்திரன் திரு. நா. முத்துக்குமாரசுவாமி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று இலங்கைச் சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் சித்தியெய்தி சர்வகலா சாலையில் கல்வி பயில்கின்றார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் சித்தாந்த வகுப்பு நடத்தி வந்தனர். சென்ற சனிக்கிழமை (21-9-57) யன்று அவர் வகுப்புக்குச் சமுகமளிக்க முடியவில்லை. அவ் வகுப்பை வித்துவான் க. கார்த்திகேசு அவர்கள் நடத்தினர். அதன் பின்பு வகுப்பு மாணவர்கள் சிலர் திரு. நாகையா அவர்களைப் பார்க்கப் போயிருந்தார்கள். அவர்களுக்கு அவர் கூறிய இறுதி மொழிகள்: **தம்பிமாரே! சிவஞானபோதம் ஒரு தேன் வதையாகும். சிவத்தின் அருளாகிய தேனை நீங்கள் பருகுதல் வேண்டும். அந்த** நோக்கத்துடன் அந்த நூலை நீங்கள் படியுங்கள்" என்பனவாகும்.

திரு. சி. நாகையா அவர்கள் சிவபரம் பொருளின் திருவருளால் ஆன்ம சாந்தியடைவாராக.

### சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையம்

சுழிபுரம் நாவலர் சனசமூகநிலையத்தில் புரட்டாதி 13 உ (29-9-57) திரு. க. இரத்தினவேல் அவர்களின் தலைமையில் பாக்கு-நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர் திருவாளர். மூ. நவரத்தினசாமி உடற்பயிற்சி வீரர்களுக்கு பரிசில் வழங்கினர்.

அப்பொழுது திரு. நா. சேனாதிராசா, பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா அவர்கள் ஆசிரியர். திரு. R. N. சிவப்பிரகாசம், திரு. ச. பெரியதம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பேச்சுப் பரிசு பெற்ற செல்வன் வே. சத்தியமூர்த்தி, செல்வன் அ. பாண்டுறங்கன் தங்கள் பேச்சுத்திறமையைக் காட்டினர். தலைவர் உரையுடனும்செயலாளரின் நன்றியுரையுடனும் கூட்டம்நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காப்பு

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடைநவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவனெண் குணனவனப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்ரும்.

— பார்க்கவ புராணம்.

வேத முடிவில் விளங்குகின்ற பிரணவமந்திர சொரூபியாகிய ஞான கணேசனது திருவடித்தாமரைகளை வணங்குகின்ேரும்.

## யாழ். நகரசபையின் பிரேரணை

அரசாங்க உதவிபெறும் பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாக்கப்படக் கூடாது என்னும் பிரேரணை ஒன்று யாழ்ப்பாண நகரசபையில் நிறைவேற்றப்பெற்றுள்ளது. குறித்த உதவிபெறும் பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாக்கப்பட்டால் பிள்ளைகளைச் சைவ கிறிஸ்தவ இஸ்லாமிய முறைப்படி வளர்க்க முடியாது என்பது பிரேரணைக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டது.

### உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணக் கல்லூரிகளின் உதைபந்தாட்டப் போட்டி முதலாம் பிரிவில் 18 கல்லூரிகளும் இரண்டாம் பிரிவில் 14 கல்லூரிகளும் சேர்ந்துள்ளன.



# கல்விக் கதிர்

விஜயதசமியுடன் இந்துசாதனக் கல்வி அநுபந்தம் ஆகிய "கல்விக் கதிர்" ஆரம்பமாகின்றது. ஆசிரியர்களுக்கும் மாண 'வர்களுக்கும் பயன்படும் அரிய விஷயங்கள் பட்சந்தோறும் இதில் வெளிவரும்.

இத்திருநாளில் ஆரம்பமாய 'இந்துசாதன இளைஞர் கழகக் குறிப்புக்களும்' இக்கதிரில் ஒளிரும். இளைஞர் கழக உறுப்பினர் எழுதும் கதைகளும் பாடல்களும் இடம்பெறும்.

[☞ கடிதங்களை கல்விக்கதிர் ஆசிரியர், "இந்துசாதனம்" யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.]

# சைவ சமயக் கல்வி



தேவாரம்

வேத நாயகன் வேதியர்
நாயகன்
மாதி னுயகன் மாதவர்
நாயகன்
ஆதி நாயக னுதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய
மூர்த்தியே,

நாம் வழிபாடு செய்யும் கடவுள் சிவன் எனப்படுவர். சிவன் என்பது ஒளி மயமாயிருப்பவர், விகாரமில்லாதவர், பெருமகிழ்ச்சியுடையவர், மங்கலமுடையவர், வேதப்பொருளாயிருப்பவர், சுகரூப முடையவர், நினைப்பவர் மனத்திற் கிடப்பவர், நன்மை கொடுப்பவர், மோக்ஷங் கொடுப்பவர் எனப் பொருள்படும். அவர் முன்னுள்ள பொருள்களெல்லாவற்றிற்கும் முன்னுள்ளவர். எல்லாங் கடந்து விளங்கும் பரஞ்சோதிரூபர். பூமி, நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், ஆதித்தன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுந் தமக்கு வடிவாய் எங்கும் இருப்பபவர் எந்த உயிர்களிலும் இரக்கமுடையவர். "கருப்பைக் குண் மூட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும் விருப்புற் றமுதளிக்கும் மெய்யர்" அறிவித்தலின்றி எவைகளையுந் தாமாகவே அறியும் பேரறிவாளர். செய்ய வேண்டியவைகளுஞ் செய்யாது விலக்க வேண்டியவைகளும் இவை இவை என்றே யாவரும் அறியும் பொருட்டு வேதங்களையும், ஆகமங்களையும் அருளிச் செய்த முழுமுதல்வர். கனியினும் இனியவர். கரும்பினும் இனியவர்.

தேவாரம்

கனியினுங் கட்டி பட்ட
கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவை நல்
லாரினும்
தனிமு டிகவித் தாளுமரசினும்
இனியன் றன்னடைந்
தார்க்கிடை மருதனே,

அவர் அங்ஙனங் கெளுதபடி எங்கும் நிறைந்தவராயினும் சிவலிங்க வடிவத்திலும், குரு வடிவத்திலும், சிவபத்தர் வடிவத்திலும் அணியராய் வெளிப்பட்டு உயிர்களுக்குக் கிருபை செய்பவர். அளவு கடந்த வலிமையுடையவர். தேவர் யாவர்க்கும் மேலனதேவர். பிறப்பிறப்பில்லாதவர். விருப்பு வெறுப்பில்லாதவர். நினைப்பு மறப்பில்லாதவர். ஒப்புயர்வில்லாதவர், பிறவிகளிலேவிட்டு, வினைப் போகங்களை ஊட்டியும், உய்யும் வழி காட்டியும், முத்தி கூட்டியும் உயிர்களைக் காக்கும் ஆதிநாயகர்.

சிவபோகசாரம்

மனம்வாக்குக் காயமுயிர்
மன்னி யசைப்பானும்
அனமாதி போக
மளிப்பானும் — நனவாதி
கூட்டிவிடு வானுமுத்தி
கூட்டிடுவா னும்பிறவி
ஆட்டிவிடு வானும் அரன்,

இவ்வியல்புடையவராகிய சிவனைக் கடவுள்எனக் கொண்டு வேதம் முதலிய சாத்திர விதிகளையுந் தழுவி நடக்கும் நெறி சைவம் என்றும், சைவ சமயம் என்றும் சொல்லப்படும். சைவம் என்பது சிவனைக் கடவுளாக வுடையது என்றும், சிவசம்பந்த முடையது என்றும் சிவனுற் செய்யப்பட்டது என்றும் பொருள்படும். சமயம் என்பது நெறி என்றும் ஆசாரம் என்றும் மார்க்கம் என்றும் பொருள்படும். இந்த நெறியிலே நடப்போர் சைவர் என்றும் சைவசமயிகள் என்றுஞ் சொல்லப்படுவர். "சைவத்தின் மேற் சமயம் வேறிலை யதிற் சார்சிவமாந் தெய்வத்தின் மேற்றெய்வ மில்" என்று சைவஎல்லப்பநாவலர்கூறுவர். "சைவ சமயமே சமய்ம்" என்று தாயுமானவர் கூறுவர். சைவ சமயத்தைச் சாருதல் இலகுவிற் கிடைப்பதன்று.

சிவஞானசித்தியார்

வாழ்வெனு மையல்விட்டு
வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மையோடுஞ்
சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால
வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினைப் போற்
றுவ ரருள்பெற் ருரே.

— அ. குமாரசுவாமிப்புலவர்.

சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றும், வேதமுஞ் சிவாகமமுமே அவர் அருளிச் செய்த முதனூல்கள் என்றும் அவற்றுள் வேதம் பொது நூல், சிவாகமம் சிறப்பு நூல் என்றும் விபூதி உருத்திராக்ஷங்களே சிவ சின்னங்கள் என்றும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே சிவமூல மந்திரம் என்றும், சிவலிங்கோபாசனையே சிவபிரானுக்குச் செய்யப்படும் மிக மேலாகிய வழிபாடு என்றும், விபூதி ருத்திராக்ஷ தாரணமும் ஸ்ரீ பஞ்சாக்ஷரஜெபமும் சிவலிங்கோபாசனையும் வேதத்தில் விதிக்கப்படினும் சிவாகமத்தில் விதித்தபடி சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு அநுட்டிக்கப் பட்டாலன்றி முத்தி சித்தியாது என்றும், விசுவசித்து, அங்ஙனம் விசுவசித்தபடியே ஒழுகும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்



# கல்வி விளக்கம்

எழுத்தறியத் தீரும்
இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா
னுகும் — மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன்
முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்பது,

"எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்னும் திருக்குறட் செய்யுட்குப் பரிமேலழகர் தம் உரையிற் காட்டிய மேற்கோள்.

இச் செய்யுள் 'கல்விப் பயன்' இன்னது என்பதனை இனிது விளக்குகின்றது.

இதன் உரை வருமாறு: எழுத்தறிய - ஒருவன் இயற்றமிழை அறிந்தால், இழிதகைமை தீரும் - அதனுல் அவனுக்குப் பேதைமையானது ஒழியும், தீர்ந்தால் - அப்பேதைமையானது ஒழிந்தால், மொழித் திறத்தின் முட்டு அறுப்பானுகும் - அவன் சொற்பகுப்பிற்ருேன்றும் மாறுபாட்டை ஒழிக்குந் தன்மையை உடையவனுவான், மொழித்திறத்தின் முட்டு அறுத்த நல்லோன் - சொற்பகுப்பிற் ருேன்றும் மாறுபாட்டை ஒழித்த நல்லறிவுடையவன், முதல் நூல் பொருள் உணர்ந்து - முதல் நூலின் பொருளை ஐயந்திரிபற அறிந்து, கட்டறுத்து - பந்தத்தை ஒழித்து, வீடு பெறும் - மோட்டமாகிய வீட்டினை அடைவான்.

பொதுவாக அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனையும், சிறப்பாக உயர்ந்த உறுதிப் பொருளாகிய வீட்டினையும் பெறுதலே கல்விப்பயன்என்பது அறநூன் முடிபு.

சங்கப் புலவருள் ஒருவராகிய விளம்பி நாகனுர் இதனை மிகவும் அழகாகச் சுவைபடக் கூறியுள்ளார்.

கற்பகக் கழிமடம் அஃகும்;
மடம் அஃகப்
புற்கந்தீர்த் திவ்வுலகிற்
கோளுணரும்—கோளுண
[ர்ந்தால்,
தத்துவ பாய நெறிபடரும்;
அந்நெறி,
இப்பால் உலகத் திசைநீறீஇ
உப்பால்
உயர்ந்த உலகம் புகும்"
— நான்மணிக் கடிகை.

விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யுங் கல்வியே கல்வி. ஏனைய கல்வி கல்வியெனப்படமாட்டாது.

X X X

ஒழுக்கம் நூற்கல்வியால் மாத்திரம் எய்தப்படுவதொன்றன்று. நல்லாசிரியரும் நன்மாணுக்கரும் ஒன்று சேர்ந்து உடனுறையும் குருகுலவாசங்களில் நித்திய கர்மானுஷ்டானம் பிரமசரியம் முதலிய ஏற்பாடுகளினுல் நல்லொழுக்கம் வளர்ச்சி பெறுகின்றது. அத்தகைய குருகுல வாசங்களே உண்மைக் கல்வி நிலையங்களாகக் கருதப்படத்தக்கன.

தொடர்ச்சி 4-ம் பக்கம்



## இலக்குமி தோத்திரம்

கோபாலன் திருமார்பிற் குலவும்ஒளி நீயாயின்
பூபாலர் தடந்தோளிற் பொலிவனப்பு நீயாயின்
நாவார வழுத்துவநின் நளினமலர்ப் பதமாயின்
பூவாரும் பதுமமொன்ருே புதுப்பீடமாவதுவே.

— சுவாமி விபுலானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயக் கல்வி

—0—

3-ம் பக்கத் தொடர்ச்சி

மார்க்கம்சைவசமயமெனப்படும்.

— ஆறுமுகநாவலர்.

**சைவ சமயம்**

'சைவ சமயம்' என்பது இவ்விந்திய நாடு எங்கும் உள்ள தமிழ் நன் மக்களால் எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னேதொட்டுக் கைக்கொள்ளப்பட்ட கடவுட் கொள்கையாகும். அஃது அவர்களை அறிவிலும்உருக்கத்திலும் ஒழுக்கத்திலும் மேலேறச் செய்து மற்றை நாட்டவர்க்கு இல்லாத் தனிப் பெருஞ் சிறப்பினை அவர்கட்கே தந்து, மற்றைச் சமயங்களுக்கெல்லாம் மேலான தனி நிலையில் வைகி விளங்குவது.

—மறைமலை அடிகள்.

**சமயாபிமானம்**

இவ்வுலகத்திலே மாநுடர் ஒவ்வோர் தொடர்ச்சி பற்றிச் செய்து போதரும் அபிமானங்கள் சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமான மெனப் பலவகைப்படும், அவற்றுள் சாதியபிமானத்தினை நோக்கத் தேசாபிமானம் உயர்ந்தது; தேசாபிமானத்தினை நோக்கப் பாஷாபிமானம் உயர்ந்தது; பாஷாபிமானத்தினை நோக்கச் சமயாபிமானம் உயர்ந்தது சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானங்கள் உயிர்க்குப் புறம்பாயுள்ள ஒவ்வோர் பொருள்பற்றி உயிர்களிடத்து நிகழும் குணங்களாம். சமயாபிமானம் உயிர்க்குயிராகிய கடவுள் சம்பந்தங் காரணமாக உயிர்களிடத்து விளங்கும் ஞான குணமாம். ஆகலால் மனிதர் மற்றை அபிமானங்களினும் சமயாபிமானத்தினையே அதிக சிரத்தையோடும் பெரிதும் போற்றி ஒழுகுதல் வேண்டும்.

இனித் தஞ்சமயங்குன்ற வருமிடத்து அது அபிவிர்த்தி எய்துதற்கு வேண்டும் முயற்சிகள் செய்யாது சும்மா விருந்து கொண்டு 'நாம் சமயாபிமானம் பெரிதுடையோம்' என்று வாயால் வெறுஞ் சொற் பிதற்றித் தம்மைத் தாமே மதித்து இறுமாப்படையும் வெறுஞ் செம்மாப்பு நாடகமன்றிச் சமயாபிமானம் ஆகாது.

— சபாபதி நாவலர்.

# கல்வி விளக்கம்

3-ம்பக்கத் தொடர்ச்சி

கடவுட்பக்தியும் நற்குண நற்செய்கைகளும் தியாக புத்தியுமுடைய ஆசிரியர்களே தம் மாணவரிடத்து நல்லொழுக்கத்தை விருத்தி செய்யும் ஆற்றல் சான்றவராவர்.

x x x

உள்ளத்தின் ஆற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உடலின் ஆற்றல் இன்றியமையாதது. இவ்விரண்டினுக்கும் பிரமச்சரியம் இன்றியமையாதது.

வித்தியார்த்திகளின் தேகமும் மனமும் பலமடையும்படி அவர்களைப் பிரமச்சரிய நெறியில் ஒழுகும்படி செய்தல் வேண்டும்

x x x

அறிவு நூல்களை ஆராய்வோடு கற்றற்கு மொழி வளம் நிரம்பியிருக்கவேண்டுமாகலின், தமிழ் மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபற ஆராய்ந்து, சிந்தனைத் தெளிவும், வாக்குத் தெளிவுமுடையவராதல் மாணாக்கர்களின் முதல் நோக்கமாகவிருத்தல் வேண்டும்.

பலதிறப்பட்ட மொழிகளைக் கற்பதனல் அறிவு விசாலிக்குமாதலினலே, தாய்மொழியில் ஒருவாறு தேர்ச்சி எய்திய மாணவனுக்கும் பிறமொழிகளையும் அவற்றிலுள்ள அறிவு நூல்களையும் கற்பித்து வைக்கலாம்.

இந்நாளிலே எமது சாகியத்தாருக்கு நேரிட்டிருக்கின்ற துன்பங்களோ மிகப் பல. அவற்றின் நீர்மையை அறிந்துள்ளோர் சிலர்; அறியாதார் மிகப் பலர்.

துன்பத்தைத் துன்பமென்று அறியாது சுகம் என நினைத்து ஏமாந்திருப்போர் ஒரு சாரார்; துன்பத்தைத்துன்பமென்றறிந்தும் அதனை நீக்குதற்கு வழிதேடாது சோம்புற்றிருப்போர் ஒரு சாரார்; மனமுடைந்து ஏற்பன செய்ய விரும்புவோர் ஒரு சாரார்.

எமது ஜனசங்க வாழ்க்கையிலுள்ள இழுக்குகள் மிகப் பல. வாழ்க்கையிலுள்ள குறைகளுட் பல நெறி தவறின கல்வி முறையினல் ஆயின.


ஆதலின் அக்கல்வி முறையைத் திருத்த அனைத்தும திருந்தும் திருந்தும்.

சோந்தமொழிவழித் துலங்குக கல்வி!

# வாழிய! வாழிய!! ஈழநல் நாடு

—:0:—

( ஆசிரியர் மா. பீதாம்பரன் )



[ சிவனொளிபாதச் செங்கதிர்ச் சிறப்பு. ]

வாழிய! வாழிய ஈழநன் னடென
வந்தனை செய்குவமே — எங்கள்
ஆழநெ டுங்கடல் தன்னில் இலங்கிடும்
ஆதித் திருத்தாயே.

நீதிவ ழிநின்று நின்மலன் பாதத்தை
நித்தமும் எத்துவமே — நின்றன்
சோதிம லைகண்டு தோத்திரம் செய்துநாம்
தொன்மறை போற்றுவமே.

நாகரை நல்கிய நாயகியே யுன்றன்
நற்றமிழ் நாட்டுவமே — என்றும்
சாகர மத்தியிற் பாரதி பாதத்தில்
சார்ந்திடும் நித்திலமே.

பஃறுளி யாற்றின் வடகரை மன்னிய
பைந்தமிழ்த் தொன்னடே — இன்று
சிஃறுளி போன்றனை யாயினுஞ் செந்தமிழ்
சேர்ந்தொளிர் பொன்னடே.

பாரகம் போற்றும் பெருந்துறை மாந்தையைப்
பைந்தமிழ்க் கோணையினைச்
சேரர்நந் தென்னவர் செம்பியர் ஆண்ட
திருப்பதியைத் தொழுவோம்.

இந்துசாதன

# இளைஞர் கழகம்

—........0........—

**இளைஞர்காள்,**

விஜயதசமி என்னும் இத்திருநாளிலே நாங்கள் உலக மாதாவாகிய அன்னையைப் போற்றுகிரேம். தீமைகளின் வடிவமாகிய மகிடாசுரனை அன்னை அழித்த நாள் — அன்னையின் ஆற்றலும் ஞானமுமவெற்றி பெற்றநாள். அன்னை, உமாதேவியார் ஆகவும், கலைமகள் — சரஸ்வதி ஆகவும், திருமகள் ஆகவும விளங்கி எங்கட்கு அருள் செய்கின்ருர்.

சிவபெருமானுடைய சக்தியினை—ஆற்றலினை, வல்லமையினை உமாதேவியார் என்று சொல்லுவர்.

தாய்மார் அன்புள்ளவர்கள். அன்னையர் அன்பு வடிவம். திருஞானசம்பந்தர் குழந்தையாயிருக்கும் பொழுது குழக்கரையில் நின்று அழுதார். சிவபெருமான அம்மை அப்பராகத் தோன்றினர். அம்மையார் பொற் கிண்ணத்திலே ஞானம்பால் ஈந்தனர்.



உடனே குழந்தைக்கு ஞானம் உண்டாகியது. அதனுலேதான் அக்குழந்தை — மூன்று வயசுக்குழந்தை "தோடுடைய செவியன்" என்னும் தேவாரத்தைப் பாடியது. அன்று தொடக்கம் அக்குழந்தைக்கு திருஞானசம்பந்தர் என்னும் பெயர் வழங்கப் பட்டது.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் கோணேசர்மீதும் தேவாரம் பாடி அருளினர்.

ஒரு தேவாரத்தில் சிவபெருமானைத் **"தாயினும் நல்ல தலைவர்"** என்கின்ருர். சிவபெருமான் தாயின அன்பினும் மேலான அன்புடையவராய் எங்கட்கு வேண்டுவன எல்லாவற்றையும் புரிந்தருளுகின்ருர்.

அவருடைய திருவருளினை உமாதேவியார் என்றும், கலைமகள் என்றும் திருமகள் என்றும் போற்றி வணங்குகின்ரேம்.

எங்களிடத்திலுள்ள தீமைகளை நீக்கி நன்மைகளை அருளுமாறு உலகமாதாவினை வேண்டுவோமாக.

பூதபல பேதவுயிர் தேககர ணதிமுறை
போகபுல னதிகளெலாம்
ஆதிஉமை வாணிதிரு வாயகில லோகநிறை
வாகவருள் கூருமொருதாய்
நாதர்கயி லாசகிரி வாசர்திரி கூடநட
ராசருடன் நாதவடிவாய்
வேதமொழி யோதிவினை யாடுகுழல் வாய்மொழிமெய்ஞ்
ஞானபரை பாதமினைவாம்.

— திரிகூடராஜப்பக் கவிராயர்

# மாணக்கர் மதிவள மன்றம்

" தமிழ் வேள் "

இன்று திருவாலவாயான படலம். இதுவரை சுகுணபாண்டியன் என்பவன் மதுரையை யாட்சி புரிந்து வந்தான். சுகுண பாண்டியனுக்குப் பின்னர் வழி வழியாக இருபத்திரண்டு பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர் மதுரையை அதற்குப் பின்னர் கீர்த்தி விபீடணன் என்பவன் அரசியற்றினன். அவன் காலத்தில ஒரு பிரளயம் உண்டானது அந்தப் பிரளயத்தில், சோமசுந்தரக் கடவுளுடையவிமானம், மீனாட்சி கோயில், இடபமலை, யானை மலை, நாகமலை, பசுமலை, பன்றிமலை என்பனவே அழியாதிருந்தன ஏனைய வெல்லாம் அழிந்து போயின.

பிரளய வெள்ளம் வற்றியபின்னர் சிவபெருமான் உலகத்தைப் படைத்தார். சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூவர் குலத்தினின்றும் மூவேந்தரையும் படைத்தருளினர்

அப்பொழுது வம்மிச சேகர பாண்டியன் என்பவன் ஆட்சி புரிந்தான் அவனது ஆட்சி நீதிநெறி தவறாதது. அதனுல் நாடு வறுமையொழிந்து வளங்கள் மலிந்து விளங்கின. மக்கள் பெருகினர். வம்மிச சேகரன் வேண்டுகோளின் வண்ணம் சிவபெருமான், அழிந்து போன எல்லையைப் பாம்பின்மூலம் காட்டியருளினர். அவன் அவ்வெல்லையைச் சுற்றி மதிலெழுப்பிமாடமாளிகைகள கோபுரங்களை யாக்கிப் பல்வளங்களும்பொலிய ஆட்சி புரிந்து வந்தான் அவன். ஆக்கிய மதில் திருவாலவாய் மதில் எனவும் நகரம் திருவாலவாய் எனவும் வழங்கப்பட்டது.

இப் பாடத்திலே யுள்ள அரும்பதங்களையும் அவற்றின் கருத்துக்களையும் கூறுவேன். குறித்துக் கொள்ளுங்கள்.

பிரளய காலம் — உலக முடிவு. ஆர்த்தல் - பொருதல்; கலிப்பகை - வறுமை அரை ஞாண் - அரையிற் கட்டுங்கயிறு. கௌபீனம்- கோவணம்; சன்னவீரம்- வெற்றிமாலை; குண்டலம்- காதணி. பாதகிங்கிணி - காற் சதங்கை. கங்கணம்- காப்பு.

திருவாலவாயானபடலம்; இவ்வளவுதான். மதுரை திருவாலவாய் எனப்பட்டது இதனுலேதான.

இனி அடுத்தபடலம் சுந்தரப் பேரம் பெய்த படலம்.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 6—10—57 —— 12—10—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

எதிர்ப்புக்கூடாக இந்தவாரம் நீர் முன்னேறக்கூடியதாயிருக்கும். நடுவாரத்தின் பின் குடும்பக் கருமங்கள் திருந்தும். மனச்சமாதானமிருக்கமாட்டாது நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்த வாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது. சுகவீனங்களுக்கிடமுண்டு வயிற்றுக்கோளாறுகளுக்கிடமுண்டு. குடும்பக் கருமங்களும் தொந்தரவாயிருக்கும் ஆனல் பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

உம்முடைய இனத்தவர்களுடன் நீர் இந்த வாரம் சண்டையிடவேண்டி வரும் குடும்பச் சூழலில் வாக்குவாதங்களுக்குமிடமுண்டு. இரகசியப் பகைவரால் தொந்தரவுகளுண்டாகும். ஆனல் அவற்றை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும்

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

சகோதர சகோதரிகளுடன் இந்த வாரம் சண்டைகளுக்கிடமுண்டு முதல் இரு நாட்களும் தொந்தரவானவையாயிருக்கும் வார மிகுதி ஒருஅளவுக்கு நல்லாயிருக்கும். ஆனல் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம். திங்கள், செவ்வாய் புதன் சிறிது குழப்பமாயிருக்கும். பின் அரை வாரம் புதுக கருமங்களுக்கு நல்லாயிருக்கும்.

**கன்னிராசி.** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய சிக்கல்கள் தொடர்ந்து நீக்கப்படாமலிருக்குக்கும் ஆனல் உம்முடைய உத்தியோக கருமங்களில் சில திருத்தமுண்டாகும். வியாழனும் வெள்ளியும் கவனமாய்க் கழிக்க வேண்டும் சிறு அபாயங்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்

**துலாம்.** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இந்த வாரம் செலவதிகரிக்கும். குடும்பச்சூழலில் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு வாரத்தின் கடைசி நாளைக் கவமாய்க் கழிக்கவும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை

ஒரு நல்லவாரம், உம்முடைய உத்தியோக கருமங்களில் அதிக திருத்தத்தைக் காண்பீர். செலவுகள் அதிகமாயிருக்கும் ஆனல் அவற்றைச் சமாளிக்கவேண்டிய பணத்தைப் பெறுவீர் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

உத்தியோககருமங்களுக்கு ஒரு நல்ல வாரம். ஆனல் வேலை கூடுதலாகும் அதனல் உமக்கு ஆறுதலிருக்கமாட்டாது. வார இறுதியில் இழிமொழிகளுக்கிடமுண்டு. குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்களைத்தவிர்க்கவும்,

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்

ஒரு நல்ல வாரம். எதிர்ப்பை நீர் மிக இலகுவாக நீக்கக்கூடியதாயிருக்கும் தனலாபங்களும் சமூகசித்தியும் நிச்சயம், பிதாவழி இனத்தவர்கள் தொந்தரவுண்டாக்குவார்கள். அவர்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இந்த வாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது ஆனல் பணத்துறையில் ஒரு நல்ல வாரம் உம்முடைய கருமங்களில் அறியாதவர்களும் அன்னியரும் உதவியாயிருப்பார்கள் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உத்தியோக சித்தி நிச்சயம் ஆனல் சில குடும்பத் தொந்தரவுகள் உண்டாயே தீரும். குடும்பத்திற் சுகவீனத்துக்கும் இடமுண்டு செலவதிகரிக்கும். அதனல் நீர் கடன்படவேண்டியும் வரும்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1 கரம்பன் எஸ். அருளானந்தம் துரைராசா
2 ஷெயூர் பெண் திரேசா ராசம்மா
— வழக்காளிகள்
இல, M B 1487

எதிராக

1 ஊர்காவற்றுறை சுருவில் நாகலிங்கம் கந்தசாமிபெண் வாலாம்பிகை
2 ஷெயூர் நாகலிங்கம் கந்தசாமி.
3 சரவணை தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
4 ஷெயூர் அப்பாக்குட்டி சுந்தரம்.
5 ஷெயூர் பெண் சிவபாக்கியம்
6 ஷெயூர் கதிரேசர் மயில்வாகனம் மகள் கனகமணி
7 ஷெயூர் மயில்வாகனம் இராசையா
8 ஷெயூர் மயில்வாகனம் அருளானந்தம்
9 வேலணை மேற்கு V. தர்மலிங்கம்பெண் சிவபாக்கியம்
10 ஷெயூர் V. தர்மலிங்கம்
11 சரவணை கதிரேசர் மயில்வாகனம் பெண் தவமணி
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1487 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆறு துண்டுக் காணிகள் 1957-ம ஞு ஐப்பசி மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை முதலாம் இரண்டாம் மூன்ரும் காணிகள் முறையே முற்பகல் 9, 10, 11 மணி தொடக்கமும், 4-ம், 5-ம், 6-ம் காணிகள் முறையே பிற்பகல் 1 2, 3 மணி தொடக்கமுமாய் அந்தந்தக் காணிகளுள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா: 5349-ம் 2500-க்கு 12-2-57 தொடக்கம் 16-7-57 வரை 15 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவும்.

### காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிறை "கிரான்சி வடக்குப் பள்ளம் பெருமாள்பள்ளம். கிரான்சி வெள்ளிடை" பர. நெ இல. ஐம்பத்தைந்து (55) எல்லை கிழக்கு சுப்பிரமணியம் இராசாவிற்குரியவாதனம், வடக்கு துரையப்பா பெண் பாறுபதிக்குரிய வாதனம், மேற்கு நாராணி அப்பாக்குட்டிக்கும் பங்காளருக்குமுரியவாதனம், தெற்கு பொன்னையா ஆறுமுகத்திற்குரியவாதனம் இதடங்கலிற் சொரியலாயரைவாசி, இதன் பதிவு C 251/104.

2 ஷெ சரவணை இறை 'பெரிய சக்களை' பர. நெ இல. இருபது (20) எல்லை கிழக்கு முருகேசு பெண் நல்லமுத்துவின் உரிமைக்காரர்கட்குரிய வாதனம். வடக்கு கணபதிப்பிள்ளை பெண் ஆச்சிமுத்துவிற்கும் மறுபேர்கட்குமுரிய வாதனம். மேற்கு கதிரேசு பெண் வள்ளியம்மைக்கும் மறுபேர்கட்கு முரியவாதனங்கள் தெற்கு கார்த்திகேசு கணபதிப்பிள்ளைக்குரிய வாதனம் இதடங்கலிற் சொரியலாயரைவாசி இதன் பதிவு C 195/21.

3. ஷெ சரவணை இறை "கொட்டை கின்றபுலமும் வண்ணுன் புலமும்" பர. நெ. இல இருபதேகால் ($20\frac{1}{4}$) எல்லை கிழக்கு வண்ணை வயித்தீஸ்பரன் கோவிலாதனம். வடக்கு விசுவநாதர் நாகலிங்கத்திற்குரியவாதனம். மேற்கு நாராணி அப்பாக்குட்டிக்கும் வண்ணை வயித்தீஸ்பரன் கோவிலுக்கு முரியவாதனங்கள். தெற்கு கார்த்திகேசு சின்னையாவிற் குரிய வாதனம். இதன் பதிவு C 248/179.

4. ஷெ தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "ஆறன் கணக்கை" பர. நெ இல. பதினறரை ($16\frac{1}{2}$) எல்லை கிழக்கு நாகலிங்கம் சரவணமுத்துவிற்கும் மறுபேர்கட்குமுரியவாதனங்கள் வடக்கு மயில்வாகனம் பெண் செல்லம்மாவின் உரித்தாளர்கட்குரிய வாதனம். மேற்கு கார்த்திகேசு மயில்வாகனத்திற்கும் மறுபேர்கட்குமுரிய வாதனங்கள், தெற்கு நாகலிங்கம் சரவணமுத்துவிற்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் 8/25 பாகம் இதன் பதிவு C 239/32.

5, ஷெ வேலணை மேற்கிறை 'கொட்டையிற் கலடு' பர. நெ. இல. பதினைந்து(15) குளி 4 5/16 கிணறும் எல்லை கிழக்கு தம்பியப்பா பெண் மாரிமுத்துவிற்குரியவாதனம் வடக்கு செல்லமுத்து இராமலிங்கத்திற்குரியவாதனம், மேற்கு கந்தையா பொன்னையாவிற்கும் மறுபேர்கட்குமுரியவாதனங்கள்.தெற்கு குமாரவேலு கந்தையாவிற்கும் மறுபேர்கட்கு முரியவாதனங்கள். இதடங்கலிற் சொரியலாயரைவாசி. இதன் பதிவு C 239/33.

6. ஷெ வேலணை மேற்கிறை ஆறன் கணக்கை, ஆறன் கணக்கை வாகையடி வயல், ஆறன் கணக்கை, வயல் பர. நெ. இல. முப்பது (30) குளி ஏழு (7) எல்லை கிழக்கு நாலிங்கம் சரவணமுத்துவிற்கும் சுப்பிரமணியம் பெண் இராசம்மாவிற்குமுரியவாதனங்கள். வடக்கு முருகேசு சின்னையாவிற்கும் முருகேசு சின்னத்துரைக்கு முரியவாதனங்கள். மேற்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலாதனம். தெற்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலுககும் நாகலிங்கம் சரவணமுத்துவிற்குமுரிய வாதனங்கள், இதடங்கலிற் சொரியலாயரைவாசி,

1957-ம் ஞு புரட்டாசிமீ 14உ.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
காரைநகர்.
M 151 4-10.

## நீர்வேலிக் கிராமச்சங்க வேலையின் ஒப்பந்த அறிவித்தல்

—0—

பின்னுற் காணப்படும் கிராம வேலையின் ஒப்பந்தமாகக்கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:-

கிராமச்சங்க உரும்பிராய்க் கந்தோரில் ரூபா பத்து கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச் செய்ய வேண்டும். அப்பத்திரங்கள் 1957-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 16-ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்குமுன் மேற்படி சங்கக்கந்தோரில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் இடது மேற்பக்கத்தில் மனும்பத்திரம் என்று எழுதி நீர்வேலிக் கிராமச்சங்கத் தலைவருக்கென விலாசமிட்டு 1957-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 18-ம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குமுன் மேற்படி சங்கக்கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக. அல்லது நிர்வேலிக் கிராமச்சங்கக் கந்தோரில் 19 - 10 - 57 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் காலை 10 மணிக்கு முன் சமர்ப்பிக்கலாம்.

தெரிந்து எடுத்த கேள்விக்காரன் மேற்படி சங்கத்தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்தம் எழுதிக்கொள்ளவேண்டும் மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகாரமுண்டு.

### வேலைகளின் விபரம்:

நீர்வேலி தெற்கு வெள்ளம் தள்ளி என்னும் கிராமச்சங்க ஒழுங்கையை ரேட்டாகத் திருத்துவதற்கு ஒப்பந்தப் பத்திரம் அழைக்கப்படுகிறது.

(Sgd)வல்லிபுரம் இராசா,
நீ. கி. சங்கத்தலைவர்.
2-10-57,
M 124 4, 11-10-57,

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு காரைநகர் மேற்கு காலஞ்சென்ற ஆறுமுகம் காசுப்பிள்ளையின் ஆதனங்களுக்குத தத்துவம்.
காலஞ்சென்றவர்.
தத்துவ வழக்கு இல 319
காரைநகர் கிழக்கு ஆறுமுகம் காசிப்பிள்ளையின் கைம்பெண் சின்னம்மா
தத்துவகாரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 319-ம் இலக்க தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1957-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுள்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1 காரைநகர் கிழக்கு களபூமி இறை வவ்வணங்கை நெற்பரப்பு 14-ம் கிணற்றில் அரைவாசியும் எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு சுப்பிரமணியசுவாமி கோயிலாதனம், மேற்கு விசுவநாதர் குமாரவேலுவும் மறுபேரும் தெற்கு ஆறுமுகம் சுப்பிரமணியமும் மறுபேரும் இதடங்கலிற் சொரியலாய் அரைதாசி பெறுமதி ரூபா 1750.

2 காரைநகர் மேற்கிறை தம்பன் நிலப்பரப்பு 5 எல்லை கிழக்கு அருணுசலம் வேலுப்பிள்ளை வடக்கு சண்முகம் கைம்பெண் சேதுப்பிள்ளையும் இன்னெருவரும் மேற்கு ஆறுமுகம் கனகசபையும் மறபேரும், தெற்கு சின்லத்தம்பி முருகேசுவின் உருமைக்காறரும் இன்னெருவரும் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி பெறுமதி ரூபா 750

3 மேற்படி இறை மணற்பிட்டி நிலப்பரப்பு 10-ம் வீடுகளும் பனைகளும் வேம்புகளும் எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு ஒழுங்கை மேற்கும் தெற்கும் ஆறுமுகம் சுப்பிரமணியம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அகற்குச் சேர்ந்தவைகளும். பெறுமதி ரூபா 300.

4 மேற்படி இறை மணற்பிட்டி நிலப்பரப்பு 15-ம் பனைகள் தென்னைகளும் எல்லை கிழக்கு முருகன் சின்னப்பன் வடக்கு பத்தன் கதிரன் மேற்கு ஒழுங்கை தெற்கு கடற்கரை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குச் சேர்ந்தவைகளும் பெறுமதி ரூபா 600.

5 மேற்படி இறை மணற்பிட்டி நிலப்பரப்பு 17-ம் பனைகள் வடலிகள் வேம்புகளும் எல்லை கிழக்கு ஆறுமுகம் சுப்பிரமணியமும் வாய்க்காலும் வடககு வாய்க்கால் மேற்கு V, இராமநாதனின் உருமைக்காறரும் மறுபேரும். தெற்கு ஆறுமுகம் சுப்பிரமணியமும் மறுபேரும் இதடங்கலும் பெறுமதி ரூபா 850

6 மேற்படி இறை இணக்கம் பிட்டியும் கொட்டனை சிட்டியும் நிலப்பரப்பு 22-ம் பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கு ஆறுமுகம் கந்தையாபிள்ளை வடக்கு கதிரவேலு பெண் பாறுபதிப் பிள்ளை மேற்கு அல்விறெட் தம்பி ஐயா தெற்கு கடற்கரை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குச் சேர்ந்தவைகளும் பெறுமதி ரூபா 450.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
27-9-57.
M 123. 4-10.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1. கரம்பன் இளையதம்பி கைம்பெண் மீனுட்சி
2. ஷெயூர் இளையதம்பி நடராசா —வழக்காளிகள்.
இல. MB 1366
எதிராக
1. சரவணை நாகமுத்து நடராசபிள்ளையும்
2. ஷெயூர் பெண் பாக்கியலட்சுமி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1366ம் இலகக வழககில் எனககுக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957ம ஞு ஐப்பசி மீ 26 ம் திகதி சனிககிழமை முற்பகல் முறையே முதலாம் காணி 9 மணி தொடக்கமும் இரண்டாம் காணி 10 மணி தொடக்கமுமாய் அந்தந்தக் காணிகருள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 3190-83 சதமும் ரூபா: 2000 க்கு 27-11-56 தொடக்கம் 26-3-57 வரை 15 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவும்

### காணிகளின் விபரம்


1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிறை 'சட்டம்பை கரப்பியான்'' பர நெ இல, $22\frac{1}{4}$ கிணறும் பனைகள் தென்னைகளும் எல்லை கிழக்கு விஞசி கந்தையாவிற்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள். வடக்கு நாகநாதர் நாகேந்திரருக்குரியவாதனம். மேற்கு பசுபதி பெண் மனேன்மணிககும் மறுபேர்கட்குமுரிய வாதனங்கள். தெற்கு நாகனதர் முருகேசுவிற்கும் மறுபேர்கட்கு முரியவாதனங்கள் இதடங்கலும்,

2 ஷெ சரவணையிறை ''வண்ணுன் துநைகலடு'' பர. நீ, இல, $37\frac{1}{2}$. எல்லை கிழகக்கு முத்துநடராசாவிற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள். வடக்கு குமாரு குளந்தைவேலுவிற்குரிய வாதனமும் ஒழுங்கையுங்குளமும்.மேற்கு ஒழுங்கையும் குளமும். தெற்கு ஒழுக்கை. இதடங்கலும்.

1957 ஞு புரட்டாசிமீ 11உ

வை ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்
காரைநகர்,
M. 120 4-10-57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 1-8-56 தொடக்கம் 31-7-57 வரை

## ஆதாய நட்டக் கணக்கு

| செலவு | ரூ. ச. | வரவு | ரூ. ச. |
|---|---|---|---|
| பிரயாணச்செலவு | 93-38 | தென்னமரக்குத்தகை | 228-50 |
| மடம் பழுதுபார்த்தல் | 252-54 | திருப்பணிக்கு | 175-91 |
| ஓடிற்றும் அதன் வேறு செலவும் | 290-50 | உண்டியல் வரவு | 1473-17 |
| கந்தசஷ்டி செலவு | 61-99 | கர்ணபூஷணம் | 61-00 |
| பூந்தோட்டச் செலவு | 325-00 | சபாபதிப்பிள்ளை சிமந்து | 1000-00 |
| நவராத்திரி ,, | 386-47 | வேப்பமரம் விற்றது | 1018-00 |
| திருவெம்பாவை ,, | 106-76 | அன்னப்பராசனம் | 136-00 |
| தைப்பூசச் ,, | 1-02 | மாதாந்த அர்ச்சனை | 554-15 |
| காகிதாதிகள், முத்திரை, அச்சுக்கூலி | 418-16 | தண்ணீர் வார்ப்பு | 49-05 |
| தேர்முட்டி இடத்தல் | 122-00 | கல்லு விற்றவகை | 320-00 |
| தற்காலிகத் தேர்க்கொட்டகை | 501-23 | சகஸ்திரநாமம் | 1248-00 |
| | | அபிஷேகம் | 1795-00 |
| | | மீசுவரி நெல் | 1780-00 |
| தென்னம்பிள்ளை நட்டது | 14-20 | சங்காபிஷேகம் | 15-13 |
| பசுமாட்டுச்செலவு | 42-25 | திருவிழா வரவு | 23728-92 |
| அபிஷேகச்செலவு | 978-01 | அடிமைச்சாதனம் | 76-00 |
| நித்திய பூசைச்செலவு | 2840-01 | சௌளக்காணிக்கை | 515-00 |
| சம்பளச் செலவு | 9914-00 | பூசைக்காணிக்கை | 5720-50 |
| பொதுச் செலவு | 536-04 | காணிக்கை | 8121-80 |
| பூசைச் செலவு | 2843-88 | மூலஸ்தானசாத்து | 1109-00 |
| திருவிழாச்செலவு | 7589-41 | மகாசபை அங்கத்தவர் | 340-00 |
| வருட வருமானம் | 22190-47 | பழைய சாமான் விற்ற | 42-19 |
| | 49507-32 | | 49507-32 |

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 31-7-57 ல் உள்ள ஐந்தொகை

| செல்மதி | ரூ. ச. | இருப்பு | ரூ. ச. |
|---|---|---|---|
| கோவில் வரவு | 54768-08 | விக்கிரக மூர்த்திகள் | 122-75 |
| மூ வை.புவனேஸ்வரி அம்மா | 500-00 | வெள்ளி | 4418-85 |
| | | மு. சி. துரைசாமி | 237-00 |
| வே, சு அச்சகம் | 90-75 | திருவாபரணம் | 7722-50 |
| மகேசு யாழ்ப்பாணம் | 209-32 | பசுமாடு | 30-70 |
| இவ்வருட வருமானம் | 22190-47 | வாகனம் | 87 2-10 |
| | | வே. விசுவலிங்கம் | 147-00 |
| | | சு. நா. கந்தையா | 70-00 |
| | | காணி | 4225-00 |
| | | நெல் | 1536-60 |
| | | பலபுள்ளி | 167-77 |
| | | கொட்டகை | 7059-01 |
| | | நா. சோமு ஆசாரி | 10-00 |
| | | கு இராசதுரை | 40-00 |
| | | P. K. அஸ்தகிரிஐயர் | 100-00 |
| | | து. துரைச்சாரி | 10-00 |
| | | D. R. O. சிமந்துவகை | 179-00 |
| | | தளபாடம் | 15250-03 |
| | | சாக்கு | 12-00 |
| | | பவுண் | 1129-40 |
| | | லைற்மெசின் | 2900-00 |
| | | ச. நடராசாக்குருக்கள் | 200-00 |
| | | தேர்த்திருப்பணிச்சபை | 1703-64 |
| | | தேர் மண்டபம் | 16126-59 |
| | | கச்சேரி | 525-38 |
| | | மேக்கன்ரைல் வங்கி | 215-00 |
| | | ரொக்க இருப்பு | 4858-30 |
| | 77758-62 | | 77758-62 |

சு. பொ. கந்தையா,
பகிரங்கக் கணக்குப் பரிசோதகர்.

க. சோமசுந்தரம்,
தனாதிகாரி.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
பரிபாலன சபையார்.

M. 114 27-9-57.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல : MB 1272

தாவடி தெற்கு
1. V. செல்லப்பா கைம்பெண் நாகரத்தினம்
2. செல்லப்பா வேலாயுதபிள்ளை
3 செல்லப்பா சபாரத்தினம்

வளக்காளிகள்

சுதுமலை வடக்கு
ஆறுமுகம் சிவசம்பு

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 1272ம் இலக்க வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக்காணிகளை 1957 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26 ம் திகதி (26-11-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 13 0-20 சதமும் இதில் ரூபா 950/-க்கு 10-10-56 தொடககம் 16-5-57 திகதி வரைக்கும் 100 க்கு ஏழுவீத வட்டியும் பின் தீர்வை கூட்டுததொகையில் இறுபடும்வரைக்கும் 100 க்கு ஐந்து வீத் வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 281-95 சதமும்,

ஆதன விபரங்கள்

(1) வடமாகாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று தாவடி இறை "கூளாவடியும் செட்டிமாததனை" நில. பர. 19½ பயிர்களும். எல்லை கிளக்கும் வடககும் வேலுப்பிள்ளை செல்லருக்கும் மறுபேருக்குமுரிய ஆததனம். மேற்கு ஒழுங்கையும் வேலுப்பிள்ளை செல்லருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும் சின்னத் தம்பி வயிரமுத்துவின் ஆதனம். இது அடங்கலில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு.

(2) வடமாகாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற் பற்று நவாலி இறை "கூகை மாவடி வயல்" நெற், பர. 12. எல்லை கிழக்கு நாகமுத்து தம்புவின் ஆதனம், வடக்கு செல்லப்பா பெண் ஆச்சிமுத்துவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் ஆதனம். தெ கு அருணாசலம் பெண் நாகமுத்துவின் ஆதனம். இது அடங்கலில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு.

(3) மேற்படி நவாலி இறை "கூகை மாவடிவயல்" நெற் பர 11 1/4. எல்லை கிழக்கு அருணாசலம் நாகமுத்துவின் ஆதனம். வடக்கு ஆறுமுகப் வேலுப்பிள்ளையின் ஆதனம். மேற்கு விநாசித்தம்பி செல்லப்பாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு தம்பாபிள்ளை நாகலிங்கத்தின் ஆதனம் இது அடங்கலில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு.

(4) மேற்படி நவாலி இறை "ஆட்கொல்லி" நில. பர. 12. எல்லை கிழக்கு சின்னையா பெண் பொன்னுவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். வடக்கு ஒழுங்கையும் சின்னையா பெண் பொன்னுவுக்கும் உரிய ஆதனம். மேற்கும் தெற்கும் வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம் இது அடங்கலில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு.

தா. செல்லையா
கொமிஷனர்.

No 37 கொழும்புத்துறை வீதி
ஊண்டிக்குளி

M 122 4-10

# அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சை

சைவாபிமானிகளின் ஆதரவில் இயங்கிவரும் கொழும்பு விவேகானந்தசபை இலங்கையின் சைவ வளர்ச்சிக்குப் பலவிதமான பணிகள் புரிந்து வருகின்றது. எதிர்காலச் சைவமக்களை வளர்ப்பதையும், சைவ மாணவர்களின் உள்ளங்களில் சமய உண்மைகளை வளர்ப்பதையும் குறிக்கோளாகக்கொண்டு மேற்படி சபையார் வருடந்தோறும் நடாத்தும் அகில இலங்கைச் சைவ சமய பாடப்பரீட்சை கடந்த 22-9-57 ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற்றது.

229 வித்தியாசாலைகளிலிருந்து மொத்தம் 13899 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இதனைவிட, தனிப்பட்ட முறையிலும் பலர் தோற்றினர். இலங்கை முழுவதும் 186 ஸ்தானங்களில் பரீட்சை நடைபெற்றது. நான்காம், ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் ஆரம்ப பிரிவில் 6764 பேரும், ஆறும், ஏழாம் வகுப்பு மாணவர் தோற்றும் கீழ்ப்பிரிவில் 3768 பேரும், ஏழாம் எட்டாம் வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் மத்திய பிரிவில் 1372 பேரும், சி.த.ப. வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் மேற்பிரிவில் 1 95 பேரும் பரீட்சைக்குத் தோற்றினர்.

வருடந்தோறும் நடைபெற்றுவரும் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தொகையும் வருடந்தோறும் உயர்ந்துகொண்டே வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடப் பரீட்சைக்கு மாணவர்களைத்தோற்றுவித்த வித்தியாசாலைகளில் அதிக மாணவர்களைத் தோற்றுவித்த பெருமை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு உரியதாகும். இருகிருந்து மொத்தம் 352 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

கடந்தவருடப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 50 சதவிகிதமானோர் சித்தியெய்தியமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இப்பரீட்சைக்கான சகல சேவைகளும இலவசமாகவே செய்து கொடுக்கப்படுகின்றன. இவர்கள் போன்ற சைவாபிமானிகளின் தன்னலமற்ற சேவையாலும் வித்தியாசாலைத் தலைமையாசிரியர்கள், பெற்றோர்களின் ஒத்துழைப்பாலும் பேலும் இப்பரீட்சைக்கு அதிகப்படியான மாணவர்கள் தோற்றிப் பயனடைவது விரும்பத்தக்க தொன்றாகும்.

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 4-10-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org